யாழ்நகரில்
குறைந்த விலையில்
சைவ உணவுகள்
மதுபான வகைகள்
நாடுங்கள்
ஹோட்டல்
ஞானம்ஸ்
299, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

HOTEL GNANAMS
Clean Comfortable Rooms
50/- to 200/-
A/C and Non A/C
BEER GARDEN
BEER 30/- V.S O.A. 7/50
OLD ARRACK 6/50
Also:
CHINESE RESTAURANT
1st FLOOR

கூடல் 2 யாழ்ப்பாணம் ஆகஸ்டு ஞு ஸைகாரி மீ 30 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 04 (13-06-1986) UTHAYAN- A DIVERY TAMIL DAILY விலை 17,

சர்வகட்சி மாநாடு:

கூட்டணியினருக்கு அழைப்பு?

ஜே. ஆரின் ரஷ்ய விஜயத்தின் பின்னரே கூட்டம் நடக்கும்

கொழும்பு, ஜூன் 13

அரசாங்கம் நடத்தவிருக்கும் சர்வகட்சி மாநாட்டுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் அழைக்கப்படுமா?

இது குறித்து அரசாங்க வட்டாரங்கள் ஆராய்ந்ததாகவும், கூட்டணியை மாநாட்டுக்கு அழைக்க வேண்டும் என்று இறுதியில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

ஜூன் 28இல் 12 நாள் விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ரஷ்யா செல்கிறார்.

அதன் பின்னரே திரு. ஜெயவர்த்தனா சர்வகட்சி மாநாட்டை கூட்டவிருக்கிறார்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு பற்றி அக்கூட்டத்திலேயே ஜனாதிபதி தெரிவிப்பார் என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினரை அழைக்கும் அரசு எண்ணம்பற்றி சென்னை கூட்டணி வட்டாரங்களுடன்தொடர்பு கொள்ளப்பட்டது.

அழைப்புக் கிடைத்தால் அதனை கூட்டணி அரசியல் குழு பரிசீலனை செய்யும் என்று அவை தெரிவித்தன.

(அ-எ-2)

திருமலையில் வான வெட்டு

திருகோணமலை, ஜூன்13

திருகோணமலை நகரில் மடத்தடிப்பகுதியில் தமிழர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் வாளால் வெட்டப்பட்டார்.

விறகு வெட்டிச் சீவனம் நடத்தும் ஒருவரே இத்தாக்குதலுக்கு ஆளானவர் என்று தெரிய வருகின்றது.

அச்சமயம் அப்பகுதியால் வந்த நீர்ப்பாசனத் திணைக்கள ஜீப் ஒன்றில் இருந்தவர்கள், அவரைக் காப்பாற்றி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

(இ - எ - 150)

கொழும்பில் நேற்றும் குண்டுப் புரளி

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு, புறக்கோட்டைப் பகுதி குண்டுப் புரளியினால் நேற்று அல்லோலகல்லோலப்பட்டது.

ஆயுதப் படையினர் அந்த இடத்துக்கு விரைந்து சென்றனர்.

மக்கள் பீதி அடைந்து அங்கும் இங்குமாக பதறி ஓடினர். (இ-எ-2)

ஊழியரின் விடாமுயற்சியால்

தொலைத் தொடர்பு மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன்.13

யாழ்ப்பாணத்துக்கும் வெளிமாவட்டங்களுக்கும் இடையிலான தொலைத் தொடர்புகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பமாகின.

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இந்த தொலைத் தொடர்புச் சேவைகள் துண்டிக்கப்பட்டு இருந்தன.

எனினும் யாழ் தொலைத் தொடர்பு திணைக்களத்தின் வானொலி தொலைத் தொடர்பு பிரிவின் அதிகாரி உட்பட நான்கு ஊழியர்கள் உயிரைப் பணயம் வைத்து கிளிநொச்சி தொலைத் தொடர்பு சமிக்ஞை நிலையத்துக்கு சென்று அங்கு ஏற்பட்டிருந்த பழுதைத் திருத்தினர்.

அண்மைக் காலங்களில் கிளிநொச்சியில் நடந்த மோதல்கள் காரணமாக கிளிநொச்சி சென்று பழுதைத்திருத்த முடியாத பயங்கர சூழ்நிலை இருந்து வந்தது.

எனினும் தொலைத் தொடர்பு திணைக்கள ஊழியர்கள் மக்களின் நன்மை கருதி தமது உயிரைத் துச்சமென மதித்து கிளிநொச்சி சென்று பழுதைத் திருத்தினர். அதனால் நேற்று முதல் தொலைபேசிச் சேவை சீரானது.

(இ-10)

யாழ் கொழும்பு பஸ் சேவை வழமை போல்

யாழ்ப்பாணம் ஜூன் 13

யாழ்ப்பாணம் கொழும்பு தனியார்பஸ்சேவைகள் இன்று முதல்வழமை போல் நடைபெறும்.

200 ரூபாவுக்கு குறையாமல் கட்டணம் அறவிடப்படுகிறது.

கிளிநொச்சியில் நடைபெற்ற "யுத்தம்" காரணமாகவும், முகாம் முன்பாகஉள்ள பாதையை பாவிக்கவேண்டாம் என போராளிகள் அறிவித்திருந்ததை அடுத்து சகல பஸ்களும் பரந்தன் இயக்கச்சி பாதையூடாக செல்கின்றன.

(இ - 10)

கிளிநொச்சிக்கு

அரச ஊழியர்கள் இன்று காலை புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கிளிநொச்சியில் பணிபுரியும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் இன்று காலை அங்கு புறப்படுகிறார்கள்

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் செய்த ஏற்பாடுகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் செயலகத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களில் பணிபுரிவோரை ஏற்றிக் கொண்டு இன்று காலை 8.30 மணிக்கு ஒரு பஸ் புறப்பட உள்ளது.

கிளிநொச்சியில் நடந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அப்பகுதியில் அரச திணைக்களம் அதுவும் கடந்த பத்து நாட்களாக இயங்கவில்லை. போக்குவரத்து வசதியினத்தால் அரச ஊழியரும் கடமைக்குச் செல்ல வில்லை. யாழ். கச்சேரியிலேயே கையொப்பம் இட்டு வந்தனர் இன்றுடன் அந்தச் சலுகை நிறுத்தப்படும்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க ஊழியர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் நாளை சனிக்கிழமைக்கு முன் கடமைக்குத் திரும்ப வேண்டும் என்றும் இல்லையேல் அவர்கள் பதவிகளில் இருந்து விலகியவர்களாகக் கணிக்கப்படுவர் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது தெரிந்ததே.

வவுனியா வந்த அதிரடிப்பொலீஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கடந்த மூன்று நாட்களில் 300க்கு மேற்பட்ட அதிரடிப்படைப் பொலீஸார் கொழும்பிலிருந்து வவுனியா அனுப்பி வைக்கப்பட்டனர், இவர்கள் வவுனியா மாவட்ட சுகாதார அதிகாரியின் வாசஸ்தலம், பெருந்திணைக்கள ஊழியர் வாசஸ்தலம் ஆகிய இடங்களில் தங்கி உள்ளனர் என்று அறியப்படுகின்றது.

தடை முகாம்களில் கடமை ஆற்றும் இவர்கள் அப்பாவி மக்களை பலவாறுகத் துன்புறுத்துவதாக வவுனியா பிரஜைகள் குழுவுக்குப் புகார்கள் கிடைத்துள்ளன.

-இராணுவ- நடவடிக்கை நிறுத்தமில்லை

தமிழர் அமைப்புகளுடன் இந்தியாவும் பேசமாட்டாது

புதுடில்லி, ஜூன் 12

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் இப்போதைக்கு இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட மாட்டா.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்துவது குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

இவ்வாறு புதுடில்லி அரசாங்க வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நிலையைத் தொடர்ந்து —

இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்றால், இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தும் விஷயம் காலவரையறையின்றிப் பின் போடப்படலாம் என்ற தமது கருத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு கடைசியாக அனுப்பிய பதிலில் பிரதமர் வலியுறுத்தி இருக்கிறார்.

இதனையும் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. ஜெயவர்த்தனா கடைசியாக இந்தியத் தூதர் டிக்ளிற் மூலம் இந்தியப் பிரதமர் காந்திக்கு நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார் அல்லவா?

அந்தக் கடிதத்தில், இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படும் என்பது பற்றி திரு. ஜெயவர்த்தனா திட்டவட்டமான கருத்து எதையும் தெரிவிக்கவில்லை என்பதையும் இங்கு அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-எ-2)

புதிய படை முகாம்

கொழும்பு, ஜூன் 13

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 'பி' பகுதியில் புதிதாக ஆயுதப் படை முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது (இ-எ-2)

அரசின் முக்கிய பொதுக் கூட்டம்

கொழும்பு ஜூன் 13

கொழும்பு தேமட்ட கொட சந்தியில் இன்று (வெள்ளிக்கிழமை) மாலை அரசாங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்படும்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இக் கூட்டத்தில் முக்கிய உரை ஒன்றை நிகழ்த்த உள்ளார் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்க அமைச்சர்கள் பலரும் இக்கூட்டத்தில் பேசுவர். (அ-எ-2)

சிப்பாய்கள் வெளியே

வர பலாலி, வயாவிளான் பகுதிகளில் பதற்றம்

பலாலி, ஜூன் 13

நேற்று வயாவிளான் இராணுவ முகாமில் இருந்தும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முகாமில்இருந்தும் சிப்பாய்கள் வெளியே வந்து இடம் மாறிக் கொண்டனர்.

பலாலி முகாமுக்கும் வயாவிளான் முகாமுக்கும் இடையில் உள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு நேரத்தில்

துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள்

திருமலையில் தொடர்ந்து பதற்றம்

திருகோணமலை, ஜூன் 13

திருகோணமலை நகரில் புதன் இரவு முழுவதும் ஊரடங்கு நேரத்தில் ஒரே துப்பாக்கி வேட்டுக்கள் கேட்ட வண்ணமாக இருந்தன.

மீன் பிடிக்க பின்னர் கரைக்குக் திரும்பிய மீனவர்கள் மீது ஊர்காவல் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அந்த மீனவர்கள் தமிழர்கள் என்றும் எப்படியோ காயமடையாமல் தப்பிக்கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

நேற்றுமாலை5 மணிக்கு திருமலை நகரில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

கடந்த புதன்கிழமை காலை திருமலை நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து ஊரடங்கு அமுலுக்கு வந்தது தெரிந்ததே.

குண்டு வெடிப்பில் சிக்கிய பஸ்களில் வந்த ளாய்க்குச் சென்ற பஸ்ஸே மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இறந்தவர்களில் இருவர் கடற்படைச் சிப்பாய்கள் இருவர் பொலீஸ் அதிகாரிகள். ஒருவர் கடற்படை அதிகாரியின் மனைவி. சோபித தேரர் என்ற பிக்குவும் மரணமடைந்தார். இவரின் தலை வேறு உடல் வேறுகக் கிடந்தது.

குண்டு வெடிப்புக்குள் சிக்கிய இரண்டுபஸ்களுக்கும் இடைவெளியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொலீஸ் சார்ஜண்ட் ஒருவரும் காயமடைந்தார்.

வெடிச் சம்பவத்தில் சிக்கிய மூன்று இ போ.ச. பஸ்ஊழியர்களும் உயிரிழந்தவர்களில் அடங்குகின்றனர். (இ - எ - 2)

சுபநேரம்

13 – 6 – 1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
5 52 முதல் 7 23 வரை
ராகுகாலம்:
10 22 முதல் 11 52வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஷஷ்டி விரதம்

உவை பாதுகாப்புக்கு எண்டு அஞ்சு அமைச்சரை நியமிச்சவை. இப்ப என்ன இன்னொரு ஆணையாளரைத் தானே கூட கூட்டியிருக்கினம்.. இன்னொரு அமைச்சரை நியமிச்சாலும் ஆச்சரியப்படுறத்துக்கில்லை!

குண்டு வெடிப்பை தடுக்க தனியான பாதுகாப்பு ஆணையாளர்

கொழும்பு, ஜூன் 13

குண்டுகள் வைக்கப்படுவதைக் கண்காணித்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சிவில் பாதுகாப்பு ஆணையாளர் ஒருவரை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்தார்.

அரசு உரிய பாதுகாப்பை மக்களுக்கு வழங்கும். மக்களும் விழிப்புணர்சியுடன் செயல்பட வேண்டும். மக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட்டால் 99 சதவிதமான குண்டு வெடி புச் சம்பவங்களை நிச்சயம் தவிர்க்கலாம்.

இப்படியும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார். (உ - எ)

மண்டைதீவில்

அகதிக்குடும்பங்களுக்கு ஒரு வாரததிற்குஉணவு

யாழ்ப்பாணம் ஜூன் 13

மண்டைதீவில்வீடுகளை விட்டு வெளியேறி பிற இடங்களில் அகதிகளாக தஞ்சம் புகுந்திருக்கும் சுமார் 800க்கும் அதிமான குடும்பங்களுக்கு ஒருவார காலத்திற்கு இலவச உணவு வழங்குமாறு விசேட உத்தரவு ஒன்றை யாழ்ப்பாண அரச அதிபர் விடுத்திருக்கிறார்.

பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளை அடுத்து வீடுகளை விட்டு வெளியேறும்படி குடும்பங்கள் அவ்வேப்பிட்டி பராக்கி வித்தியாசாலை சென்பிலிப்பஸ் தேவாலயம், சென்ஜேம்ஸ் தேவாலயம், மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

(உ)

குமாரணதுங்க தலைமையிலான குழு

19 இல் தமிழகம் பயணம்

கொழும்பு, ஜூன் 13

இலங்கை மக்கள் கட்சித் தலைவர் திரு. விஜய குமாரணதுங்க தலைமையிலான குழு ஜூன் 19 ஆம் திகதி அளவில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக திரு. விஜய குமாரணதுங்க கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றைச் சந்தித்துப் பேசினார்.

தமிழ்ப்போராளிகளைச் சந்தித்து ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுபேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வைக் காணும்படி கேட்பதே திரு. விஜய குமாரணதுங்கவின் தமிழக விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-2)

இலங்கை அமைச்சரின் முன்னாள் ஊழியரும் கைது

தமிழகத்தில்உளவு பார்த்தாராம்

சென்னை, ஜூன் 12

இலங்கை அரசுக்கு உளவு பார்த்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தமிழ் நாட்டுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் இலங்கை அமைச்சர் ஒருவரின் முன்னாள் பாதுகாப்பு ஊழியரும் இருக்கிறார்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் அங்கம் வகிக்கும் சங்கம் ஒன்றின் தலைவரும், முன்னாள் நாடக, திரைப்பட நடிகரும், இந்நாள் பிரயாண முகவருமான ஒருவரும் கைது செய்யப்பட்டவர்களில் முக்கிய மானவர்கள் ஆவர்.

திருமலையில் தமிழர் நடமாடமுடியாத நிலை

திருகோணமலை, ஜூன் 13

திருகோணமலை நகரில் மடத்தடி, ரயில் நிலையம் அனுராதபுரம் சந்தி ஆகிய பகுதிகளில் தமிழர்கள் நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அப்படிச் செல்லும் தமிழர்கள் வழிமறிக்கப்பட்டு தாக்கப்படுகிறார்கள் என்று முறையிடப்படுகிறது.

மடத்தடி, ஆண்டான் குளம், ரயில் நிலையம் பகுதிகளில் ஊர்காவல் படையினர் தான் காவல்பணி புரிகின்றனர்

ஆயுதப்படையினர் அப்பகுதிகளுக்குச் செல்வது இல்லை

பல அசம்பாவிதங்கள் இடம் பெற்றும் நகரில் உள்ள தமிழர்கள் பெரும்பாலோர் இடம் பெயர்ந்து செல்ல விக்லை என்று தெரிய வருகிறது

சொந்த வீடுகளிலேயே நகரில் தமிழர்கள் குடியிருந்து வருகின்றனர்.

(உ-எ-150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நோய்த் தொற்று ● கிருமிநாசினி இல்லை

வெங்காயச் செய்கை மோசமாகப் பாதிப்பு

விவசாயிகள் கஷ்டம்

பலாலி, ஜூன் 13

குடாநாட்டில் குறிப்பாக வலிகாமம் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் வெங்காயச் செய்கை ஒரு புதுவகைப் 'புழு' வினால் பாதிப்படைந்துள்ளது.

இதனால் இந்தப் போகத்தில் குடாநாட்டின் வெங்காயச்செய்கை மோசமாய் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகிறது

இந்தப் புழுவின் தாக்கத்திற்கு உள்ளாகும் வெங்காயப்பயிரின் தாள்கள், ஓரிரு நாட்களிலுள் ஊதுபத்தி எரிந்து சாம்பர் கீழ்நோக்கி சரிந்து வீழ்ந்து தூங்குவது போல் சாய்ந்துவிடுகின்றன.

இப்புழுவின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர்.

வெங்காயப் புழுவுக்கென மக்கள் பாவிக்கும் பலவகைக் கிருமிநாசினி வகைகள் கொழும்பிலிருந்து கொண்டுவர முடியாது இருப்பதால் மேற்படி கிருமிநாசினியின் விலை என்றுமில்லாதவாறு பன்மடங்கு கூடியிருக்கிறது.

இதனால் இக்கிருமிநாசினி தேவைப்படும் அவசர வேளையில் விவசாயிகள் அவற்றை வாங்க முடியாது திண்டாடுகின்றனர்.

அனேகமான பழைய வகைக் கிருமிநாசினிகளுக்கு புழுக்கள் இயைபாக்கப்பட்டதால் (பழக்கப்பட்டதால்), பழைய வகை கிருமிநாசினிகள் தெளித்தும் புழுக்களைக் கட்டுந்படுத்தமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'பேத்ரோய் ட்டீ சிஸ்' என்ற புதுவகை கிருமிநாசினிகள் இரண்டு அவுன்ஸ் புட்டி ஒன்று தற்போது 150 ரூபாவுக்குமேல் விற்பனைசெய்யப்படுகின்றதாம்.

இவற்றின் சாதாரண விலை 60 ரூபா மட்டுமே எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-119)

மட்டக்களப்பில் வேலைவாய்ப்பு வசதி அதிகரிக்க திட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 13

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இளைஞர்-யுவதிகள் வேலை வாய்ப்பு பெறுவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இவ்வருடம் பல்வேறு தொழிற் பயிற்சி திட்டங்கள் மேற்கொள்ளவிருக்கின்றது.

மேற்படி தகவலை மாவட்ட இளைஞர் சேவை அலுவலகர் திரு. எஸ். பேரின்பநாதன் செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

இவ்வருட வேலைத்திட்டம் தொடர்பாக அவரது அலுவலகத்தில் இம் மகாநாடு நடைபெற்றது.

அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்.

இந்த வருடம் தேசிய விடமைப்பு அதிகார சபையுடன் இணைந்து 150 வீடுகள் சுய அடிப்படைத் திட்டத்தின் கீழ் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

நடமாடும் பெண்கள் பயிற்சித் திட்டம் இவ்வருடம் முனைக்காடு, வாகரை ஆகிய இடங்களில் அமைகின்றன.

பெண்கள் சுய தொழில் வாய்ப்பு பெறுவதற்காக 3 மாத பயிற்சி வழங்கப்படும்.

தேசிய தொழிற் பயிற்சி சபை அனுசரணையுடன் இம் மாவட்டத்தில் 900 இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும். மாதாந்தம் மன்றம் பயிலுநர்களுக்கு 300 ரூபா அலவன்ஸ் வழங்கும்.

ஏறுவூரில் 6 மாத மகளிர் நெசவு பயிற்சி திட்டம் மேற்கொள்ளப்படும். 25 மகளிர் பயிற்சி பெறுவர். பயிற்சியின் பின்பு கைத்தறிகள் வழங்கப்படும். இப்படி அவர் கூறினார். (உ-21)

ஆயுள்வேத ஆஸ்பத்திரி இடமாற்றம்

காங்கேசன்துறை, ஜூன்13

பதற்றமான சூழ் நிலையையடுத்து வயாவிளானில் இயங்கிய இலவச சித்த ஆயுள்வேத ஆஸ்பத்திரி தெல்லிப்பளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ் - அபிவிருத்திச் சபை மயிலிட்டி உப-அலுவலக ஆதரவில் வயாவிளானில் இயங்கி வந்த மேற்படி இலவச ஆயுள்வேத ஆஸ்பத்திரி பாதுகாப்புக் கருதி தெல்லிப்பளை டச்சு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனால் தெல்லிப்பளை, வீமன்காமம், மாவிட்டபுரம், வறுத்தலைவிளான், மயிலிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இலகுவில் வரக்கூடிய வசதியான இடத்திற்கு தற்போது ஆஸ்பத்திரி மாற்றப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (உ-)

"அறுவடை நாள்" படத்தில் சிவாஜி மகன் ராம்குமார் நடிக்கிறார்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் திரைபடப் உலகிற்கு வந்து முப்பது வருடங்களுக்கு மேலாகி விட்டன. இவரது இளைய மகன் பிரபு அவரது வாரிசாக நடித்து வருகின்றார்.

மூத்தமகன் ராம்குமார் சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கும் 'அறுவடை நாள்' படத்தில் முதன்முறையாக நடிக்கின்றார்.

ராம்குமார் மனம் திறந்து இக்கருத்தை வெளியிட்டார்.

இத்தனை நாள் கமராவுக்குப் பின்னே நின்று கோணங்களை ரஸித்தபடி இருந்தவன் நான். புரொடக்ஷன் பொறுப்புகளை மட்டுமே கவனித்து வந்தேன். இன்று நடிப்பையும் அத்துடன் இணைந்துள்ளேன்.

ஒரு நடிகனின் மகன் நடிகனாவதில் என்ன அதிசயம் என நீங்கள் கேட்கலாம்.

ஆனால் நடிகர் திலகத்தின் இளையமகன் காலூன்றிப் பெயர் பெற்றிருக்கையில் மூத்த மகன் சில ஆண்டுகள் தாமதித்து மேக்கப்புடன் நிற்கின்றேனே... அது அதிசயமில்லையா?

'அறுவடைநாள்' படத்தில் முன்போக்குச் சிந்தனையுள்ள குறிப்பாக தேசிய உணர்வுமிக்க ஒரு கத்தோலிக்கப் பாதிரி வேடத்தில் தோன்றுகின்றேன்.

அந்தப் பாத்திரம் ஓர் புதிய வாரப்பு. புரட்சிகரமான சிறு வேடம் எனினும் திரைக்கதையின் ஓட்டத்திற்கு மிகவும் முக்கியமானது.

அப்பாவின் ஜாடை, உடல்வாகு போன்ற அம்சங்கள் தம்பி பிரபுவைவிட என்னிடமே அதிகம் என்று எல்லாரும் சொல்வார்கள். ஆனால் பிரபு திரையுலகில் என்னை முந்திக்கொண்டான்.

திரை இசை அரசிகள் லதா மங்கேஷ்கரும் ஆஷாவும் எங்கள் குடும்பத்தில் அக்கறை மிகுந்தவர்கள். சந்திக்கும்பொழுது எல்லாம் என்னை நடிகனாக வேண்டும் எனச் சொல்வார்கள்.

அறுவடைநாள் அவர்களது ஆசையை பூர்த்திசெல்யும்

ரசிகர்கள் என்னை வரவேற்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.



பயிர்ச்செய்கை அதிகாரிகளின் கடமை கருத்தரங்கில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்.13

விவசாயிகளின் தேவைகளை கிராமிய, பிரதேச மட்டங்களில் தீர்ப்பதற்கு அனைத்து திணைக்களங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுச் செயலாற்ற வேண்டியது பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களின் கடமையாகும்.

யாழ் மாவட்ட கமநலசேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் முல்லைத்தீவு மாவட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் இவ்வாறு குறிப்பிட்டார். கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. எஸ். பத்மநாதன் தலைமை வகித்தார்.

விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கல், சிறுநீர்ப்பாசன குளங்களைப் புனரமைப்புச் செய்தல், உரம் கிருமிநாசினி விநியோகம், ஆகிய விடயங்கள் இக்கருத்தரங்கில் ஆராயப்பட்டன.

பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். குழந்தைவேலும் உரையாற்றினர். திரு. என். தெய்வேந்திரம் நன்றியுரை கூறினர். (உ)

தவறி வீழ்ந்து மரணம்

வட்டுக்கோட்டை ஜூன் 18

மீன் பிடிப்பதற்காக கடலில் போட்ட தமது வலையைப் பார்ப்பதற்காக அதிகாலை சென்ற கடற்றொழிலாளி ஒருவர் தோணியிலிருந்து தவறி கடலில் விழுந்து மரணமானார்.

மாதகல் நுணசை வீதியைச் சேர்ந்த திரு. இன்னாசித்தம்பி யோசப்நாயகம் (வயது 39) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் சுழியோடிகளினால் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.

இவர் வழமைபோல மீன் பிடிப்பதற்காக முதல் நாள் இரவு போட்ட மீன் பிடி வலையை அதிகாலையில் எடுப்பதற்காகச் சென்ற போது தோணியிலிருந்து தவறி வீழ்ந்து மரணமானதாகவும்

சக கடற்றொழிலாளர்கள் இவரது சடலத்தைத் தேடி எடுப்பதில் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலனளிக்காததைத் தொடர்ந்து சுழியோடிகள் தேடியதனால் சடலம் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஒ-161)

பல்கலைக்கழக

மாணவர் குரலாக 'சரத்' ஒலித்தார்

பலாலி, ஜூன். 13

சரத்முத்தெட்டுவேகம உழைக்கும் தொழிலாளவர்க்கத்துக்காக மட்டும் குரல் கொடுக்கவில்லை.

பல்கலைக்கழக மாணவர்களது குரலாகவும் ஒலித்தார். நாடாளுமன்றத்திலும், வெளியிலும் தீவிரமாக மாணவர்களுக்காகப் போராடிய ஒரு போராளியாவார்.

இவ்வாறு அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் அச்சுவேலி 'கல்வி வட்டத்' தால் ஒழுங்குபடுத்தப்பட்ட 'சரத்' நினைவாஞ்சலிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் கூறினர்கள்.

அவர் மேலும் கூறியதாவது;

'பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் -பொலிஸ் மோதல் ஏற்பட்டபோது-'வீரசூரியா' என்ற மாணவன் இறந்தபோது—அரசு மாணவர்களைக் கைதுசெய்து வழக்குத் தொடர்ந்தது. மாணவர்களுக்காக இலவசமாக வழக்கினில் வாதாடி மாணவர்களுக்கு வெற்றியினைப் பெற்றுக் கொடுத்தார் என்றார்.

சட்டத்தரணி கே. பாலசிங்கம் பேசும் போது—

மானிட நேயத்துக்கான நீதிக்குரலாக நாடாளுமன்றத்தில் அவரது குரல் ஒலித்தது மட்டுமன்றி உலகத்தின் கண்முன் பாசிச அரசின் கோரத்தன்மையை எடுத்துக்காட்டியவர் அவர் என்றார்.

முன்னாள் யாழ். மாவட்ட சபைத்தலைவர் திரு ந. இராசேந்திரன் திரு. முத்துசிவஞானம். திரு. ஜெகந்திரபோஸ் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (உ—எ—119)

இந்தியாவில் பனம் பொருள் பயிற்சி

சாவகச்சேரி,ஜூன் 13

பனம்பொருள் தொடர்பான பயிற்சிகளை இந்தியா சென்று பெறுவதற்கு திரு. கே. சிவகணேசன், செல்வி ஜி. அந்தோனிப்பிள்ளை, திரு. எஸ் கோகிலதாஸ் ஆகியோர் பனம் பொருள் அபிவிருத்திச் சபையினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ. நா. அபிவிருத்தி நிதியில் இருந்து இவர்களுக்கு உபகாரச்சம்பளம் வழங்கப்பட ஏற்பாடாகி இருக்கிறது. (இ-31)

ஆங்கில வகுப்புகள்

யாழ்ப்பாணம்.ஜூன்.13

திறந்த பல்கலைக்கழக ஆங்கில வகுப்புகள் மே மாதம் 18 ஆம் திகதி யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் அமைந்திருக்கும் திறந்த பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆங்கில வகுப்புகளுக்கு வரத்தவறிய மாணவர்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வகுப்புகளுக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ - 10)

விடு விற்பனைக்கு

மாகியம்பதி, கந்தரோடை ரோட்டில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 6 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புக: க அப்புத்துரை மாஸ்டர், 'மலர்இல்லம்', அளவெட்டி தெற்கு.

காணி விற்பனைக்கு

கட்டப்பிராயில் நல்ல சூழல் உள்ள இடத்தில் 19 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.பிரித்தும் கொடுக்கப்படும். நல்ல வருமானம் உண்டு. மொத்தமாகக் கொள்வனவு செய்பவருக்கு பரப்பு ஒன்று இருபத்தையாயிரமாகக் கொடுக்கப்படும். தொடர்பு: பொ. பொன்னுத்துரை, 3ஆம் கட்டை, கல்வியங்காடு.

மனையியல் கண்காட்சியும் விற்பனையும்

(கேக் ஐசிங், பூவேலை, சமையல், தலையலங்காரம், தையல், கோலம், வர்ணம்.

காலம்: ஜூன் 14ம் 15ம் 16ம் திகதி காலை 9.00 முதல் மாலை 6 00 வரை

இடம்: G S லேடிஸ் அக்கடமி இல. 57, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

பிரவேசம்: ரூ. 5/-

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போர்ட், விசா, பொன்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும்

செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

குறிப்பு:
பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு முற்பணம் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

இனக்கலவரங்களில்

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கடன்உதவி

கல்வித் திணைக்கள ஊழியருக்கும் கிடைக்கும்

பலாலி, ஜூன் 13

கடந்த 1983-85ஆம் ஆண்டுகளில் இனக்கலவரங்களினால் பாதிப்படைந்த ஆசிரியர், ஊழியர், எழுதுவினைஞர்கள்போன்றோருக்கு கடன் வழங்க யாழ் கல்வித்திணைக்களம் தயாராகி உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மேற்படி இனக் கலவரங்களில் பாதிப்படைந்தவர்களுக்கு அவர்களது இரண்டுவருட சம்பளத்திற்கு சமனான தொகையைக் கடனாக வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் யாழ் கல்வித் திணைக்களத்தினூடாக விண்ணப்பித்தவர்களுக்கு இக்கடன் வழங்கப்படும்.

இதற்காக யாழ்கல்வித் திணைக்களத்திற்கு 7 இலட்சம் ரூபா முதற் கட்டமாகக் கிடைத்திருப்பதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விண்ணப்பங்கள்கிடைத்த ஒழுங்கின்படி இலக்கமிடப்பட்டு, முதல் முன்னூறு விண்ணப்பதாரிகளுக்கும் பிணை ஒப்பமிட அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தொடர்ந்து ஏனையவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படும் எனவும் -

விண்ணப்பித்த - தகுதியான - அனைவருக்கும் கடன் கட்டாயமாக வழங்கப்படும் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

சுமார் 700 இற்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளதாகக் தெரிய வருகின்றது.

இதற்கான நிதியை அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு யாழ். கல்விப் பணிப்பாளர் முழு முயற்சியையும் மேற்கொண்டுள்ளார் என அறியப்படுகின்றது. (2-119)

மந்திகை ஆஸ்பத்திரி கட்டட வேலை

யாழ்ப்பாணம், ஜூன் 13

மந்திகையில் உள்ள ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவு கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன.

இக்கட்டட வேலைகளுக்குப் பதினைந்து லட்ச ரூபாவும் சென்றுண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ஒதுக்கப்பட்டது. (உ-9)

34 பாடசாலைகளில் கட்டடங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்மாவட்டத்தில் பத்து தேர்தல் தொகுதிகளில் 134 பாடசாலைகளில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட 110 லட்சம் ரூபா செலவில் இக்கட்டட வேலைகள் இடம் பெற்றன. (உ-9)

தீவுப்பகுதி மின் விநியோக தடை: சீர்கேடு பற்றிய விளக்கங்கள் அத்தியட்சகர் தருகிறார்

ஊர்காவற்றுறை, ஜூன் 13

தீவுப்பகுதிக்கான மின்சார விநியோகம் அடிக்கடி தடைப்படுகிறது. இதனை சீர் செய்வதில் உள்ள பல கஷ்டங்கள் குறித்து மின்சார சபை அத்தியட்சர் உதயனுக்கு விளக்கமளித்தார்.

மின்சார விநியோகத்தை சீராக வழங்குவதற்கு நானும் எனது ஊழியர்களும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம்.

ஆனால் சில சந்தர்ப்பங்களில் நிகழும் மின்சார தடைகள் எமது சக்திக்கு அப்பாற்பட்ட வகையிலேயே இடம் பெறுகின்றன. அவைகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் நாங்கள் நடவடிக்கைகள் எடுக்க முனைந்து வருகின்றோம்

வேலணை பகுதிக்கான மின்சார சபை அத்தியட்சகர் திரு. விஜயசிறி இப்படிக் கூறினர்.

கூடிய வாகன வசதிகள் இல்லை. அத்துடன் அவசர பராமரிப்பு வேலைகளுக்குரிய மின்பொருள்களை பெறுவதில் கூட நிறைய கஷ்டங்கள் உள்ளன. அப்படியிருந்தும் கூடிய கவனம் செலுத்தி கடமையாற்றி வருகின்றோம்.

சில வேளைகளில் காரைநகர் கடற்படை முகாமிற்கு அருகில் பராமரிப்பு வேலைக்காக நாங்கள் செல்ல முடியாமலுள்ளது.

இதனால் சில மணி நேரங்கள் தாமதம் நிகழலாம். இவையெல்லாவற்றையும் தீவுப்பகுதி மக்கள் உணரவேண்டும்.

தீவுப்பகுதியை பொறுத்தளவில் அதிகமான அளவு மின் இணைப்புக்கள் சட்ட விரோதமானவை. இவ்வாறான சட்டவிரோதமான மின் இணைப்புக்களைப் பெறும் பலர் தாங்களாகவே எமது உபகரணங்களையும், மின் விநியோக இணைப்புக்கருவிகளையும் கையாள முனைகின்றார்கள். இதனால் நியதிக்கு மாறான முறையில் மின் சாரம் பாய்வதால் சேதங்கள் அதிகமாகின்றன.

சில வேளைகளில் இதனால் உயிராபத்துக்களும் நிகழலாம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ - 16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45ஆம் நாள் நினைவு அஞ்சலி

ஈழ தேச விடுதலைப் போராட்டம் துயர வரலாற்றில் !

அன்னை மடியில்:
1960 - 01 - 07

மண்ணின் மடியில்
1986 - 04 - 30

முருகேசு லோகேஸ்வரன் (லோகன்)
அல்லின் வீதி,
காரைநகர்.

அரசியல் அவலங்கள்...
அதிகார வெறிபிடித்த ஆக்கிரமிப்பாளர் களால்
மனிதப் பண்புகள் மரணித்துவிட்ட
எங்கள் தேசத்தில்
ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக
விடுதலையின் பெயரால் கிடைத்த ஆயுதங்கள் இன்று
எம் மக்களையே குறி பார்க்கும்
அவலங்கள்...
... ...
ஈழ விதிகளில்
சிவப்புக் கொடிகளை கறைபடிந்த
கரங்களிலேந்தி
சிவப்பு பிடியல்
சீறிப்பாயுமென
சிவப்பு
வணக்கங்களுடன்
இன்னும் வருவார்கள்.
... ...

இங்ஙனம்,
தாய், தம்பி,
தங்கை, அக்கா,
மாமன்,மாமிமார்,
மைத்துனர்,
அயலார்,
நண்பர்கள்,
1986-06-12.

உதய சங்கற்பம்

தெய்வீகம் உனது பிறப்புரிமை. ஒழுங்கான சாதனையின் மூலம் அதை வெளிப்படுத்து.

—சுவாமி சிவானந்தர்

உதயன்
உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை
இல. 15 2வது ஒழுங்கை, 8வைரவிங்க பிரதி, யாழ்ப்பாணம். 13-06-86
தொலைபேசி 24805, 22073
விலை ரூ.2.25

மீண்டும் அந்தக் கேள்வி

இலங்கையின் இனப்பிரச்சினையை நல்லெண்ணம் மூலம் மத்தியஸ்தம் செய்து வைப்பதில் இருந்து இந்தியா விலகி விடுமா?

இப்படி ஒரு கேள்வி இப்போது மீண்டும் தோன்றியுள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் உத்தியோகப் பற்றற்ற நிலையில் இந்தக் கேள்வி எழுந்தது. ஆனால் இப்போது உத்தியோக ரீதியாகவே அது எழுப்பப்பட்டிருக்கிறது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஆகக் கடைசியாக ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதனைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் கையளித்தார்.

அதன் பின்னர் மூன்று நாட்களில் நான்கு தடவைகள் திரு. ஜெயவர்த்தனாவை அவர் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

ராஜீவ் காந்தியின் கடிதத்தில் முக்கிய கேள்வி ஒன்று ஜே. ஆரிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

இலங்கை பிரிக்கப்படக்கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அவ்வாறானால் தமிழர்களுக்கு எந்தளவுக்குச் சுயாட்சி வழங்கத் தயாராக இருக்கிறீர்கள். இதுவே ராஜீவின் கேள்வி.

இந்தக் கேள்விக்குப் பலவித கோணங்களில், பலவகையான அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன.

அர்த்தங்கள் எத்தனை விதங்களாக இருப்பினும் அடிப்படை ஒன்றுதான். தமிழர்களுக்கு எந்தளவுக்கு சுயாட்சி வழங்குவதற்கு, இலங்கை அரசு தயாராக இருக்கிறது என்பதை முதலில் அறியவேண்டும். அது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இல்லையேல், சுயாட்சி முறை எப்படி இருந்தால் தமிழர்களைத் திருப்திப்படுத்தலாம் என்பதை இந்தியா இலங்கைக்கு அறிவுறுத்தும். அதனை இலங்கை கேட்கவில்லை என்றால் இந்தியா மத்தியஸ்தர் நிலையிலிருந்து விலகிக் கொள்ளும். அதன் பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தானாகவே மேற்கொள்ளும். இதுவே ராஜீவின் கடிதத்தின் அடிப்படை.

ஆனால் இலங்கை அரசின் — ஜனாதிபதியின் பதில் எழுத்தில் தெரிவிக்கப்படுவதற்கு முன்னரே, இந்தியா மத்தியஸ்தத்திலிருந்து விலக நேரிடும் என்ற சமிக்ஞையை டிக்ஸிற் தெரிவித்து விட்டார்.

ராஜீவின் கடிதத்தைச் சமர்ப்பித்த பின்னர் ஜனாதிபதியுடன் நான்கு தடவைகள் நடத்திய பேச்சுக்களில் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசு தயாராக இல்லை என்பதைத் திரு. டிக்ஸிற் ஊகித்திருக்கவேண்டும். அதனாலேயே அவர் இந்தியா மத்தியஸ்தர் நிலையிலிருந்து விலகிக் கொள்ளும். அதன் பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தானாகவே மேற்கொள்ளும். இதுவே ராஜீவின் கடிதத்தின் அடிப்படை.

ஆனால் இலங்கை அரசின் — ஜனாதிபதியின் பதில் எழுத்தில் தெரிவிக்கப்படுவதற்கு முன்னரே, இந்தியா மத்தியஸ்தத்திலிருந்து விலக நேரிடும் என்ற சமிக்ஞையை டிக்ஸிற் தெரிவித்து விட்டார்.

ராஜீவின் கடிதத்தைச் சமர்ப்பித்த பின்னர் ஜனாதிபதியுடன் நான்கு தடவைகள் நடத்திய பேச்சுக்களில் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசு தயாராக இல்லை என்பதைத் திரு. டிக்ஸிற் ஊகித்திருக்கவேண்டும். அதனாலேயே அவர் இந்தியா மத்தியஸ்தத்திலிருந்து விலகுவதனைப் பிரஸ்தாபித்திருக்க வேண்டும்,

இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா மத்தியஸ்தம் செய்வதிலிருந்து விலக வேண்டும் என்பதே இலங்கை அரசின் உள்ளார்ந்த விருப்பம் ஆகும். பேச்சுக்கு, வெளிப்பூச்சுக்கு இந்திய நல்லெண்ணத்தை விரும்புவதாகக் காட்டிக்கொண்டாலும், இனப்பிரச்சினையை இந்தியாவின் கையாள்கையில் இருந்து நீக்கி விட வேண்டும் என்பதே இந்த நாட்டு அரசின் விருப்பம்.

அரசாங்கம் கடந்த மூன்று வருடங்களாக இனப்பிரச்சினை விவகாரங்களைக் கையாண்டு வரும் தன்மைகள் அதனையே புலப்படுத்துகின்றன.

மத்தியஸ்தத்திலிருந்து இந்தியா விலகுவது இலங்கை அரசுக்கு விருப்பமானதாயினும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் இனப்பிரச்சினையைத் தீர்க்க உதவா என்பது மட்டும் நிச்சயம்.

அதன் பின்னர்—

இந்து சமுத்திரப் பிரதேசத்தில் ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவித்து மக்கள் அழிவைப் பிறப்பிக்கும் கருவாகவே இனப்பிரச்சினை அமையும்.

அதனால் இலங்கைக்கும் நன்மை விளையாது. இந்தியாவுக்கும் நன்மை விளையாது.

சமரச தீர்வில் பர்னுலா நம்பிக்கை

பி-பி-ஸிக்கு பேட்டி

சண்டிகார், ஜூன் 12

பஞ்சாப் பிரச்சினைக்கு சமரச வழிகளில் தீர்வுகாணப்பட முடியும்; காணப்படும். காணப்பட்டாகவும் வேண்டும்.

இப்படி பஞ்சாப்மாநில முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னுலா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

வெங்கடராமையா கமிஷனின்படி பஞ்சாப் மாநிலத்துக்கு சண்டிகார்முழுமையாக ஒப்படைக்கப்படவுள்ளது.

ஜூன் 21ஆம் திகதி இவை ஒப்படைக்கப்படவுள்ளன.

இதுசம்பந்தமாக புதுடில்லியில் சுறுசுறுப்பாக உயர்மட்ட ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கட்டத்தில் பஞ்சாப் முதலமைச்சர் பர்னுலா, பி.பி.சி வானொலியின் புதுடில்லிச்செய்தியாளர் மார்க் ரலிக்குப் பேட்டி ஒன்றை கடந்த வியாழக்கிழமை அளித்தார்.

அப்பேட்டியில் திரு. பர்னுலா சொன்னதாவது;

பொற்கோயிலுக்குள் பொலீஸை அனுப்பியது சட்டம் – ஒழுங்கு பராமரிக்க வேண்டியே.

தீவிரவாதிகளை வெளியேற்ற கடைசி முயற்சியாகவே படையினர் பொற்கோயிலுக்குள் அனுப்பப்பட்டனர்.

பஞ்சாப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணப்பட முடியும்; காணப்படும் காணப்பட்டாகவும் வேண்டும்

பொற்கோயிலுக்குள் படையினரை அனுப்பியது குறித்து அகாலிதள் கட்சியைவிட்டு வெளியேறியவர்கள் மீண்டும் கட்சியில் சேர்ந்து கொள்ள விரும்புகின்றனர்.

தாங்கள் வெளியேறியது முட்டாள்தனமான செய்கை என்று அவர்கள் உணர்ந்து விட்டனர்.

மீண்டும் கட்சியில் சேருவது பற்றிய வழிவகைகளை அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

இப்படி திரு. பர்னுலா பேட்டியில் சொன்னார். (இ-எ)

நாஸி குற்றவாளி அல்லன் என்கிறார் குர்ட் வால்ட்ஹெய்ம்

வியன்னா, ஜூன் 12

நான் யுத்தக்குற்றவாளி அல்லன்; நாஸி இயக்கத்தைச் சேர்ந்தவனும் அல்லன்.

இப்படி ஆஸ்திரிய புதிய ஜனாதிபதி குர்ட் வால்ட்ஹெய்ம் சொன்னார்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது நான் யூதர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை

நான் ஜேர்மன் இராணுவத்தில் வெறும் லெப்டினன்டாகவே பணியாற்றினேன்.

என் மீது சுமத்தப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எவருடனும் பேச்சுக்கள் நடத்தத் தயாரக உள்ளேன்.

இப்படி ஜனாதிபதி வால்ட்ஹெய்ம் சொன்னார். (இ-எ)

மார்க்கோஸ் ஆதரவாளர் சதிமுயற்சி

மணிலா, ஜூன் 12

பதவி துறந்த ஜனாதிபதி பெர்டினன்ட் மார்க்கோஸின் ஆதரவாளர்களின் சதித்திட்டம் ஒன்றை பிலிப்பீன்ஸ் ஆயுதப்படையினர் முறியடித்தனர்.

இப்படி பிரெஞ்சு செய்தி ஏஜன்சி ஒன்று தெரிவித்ததாக ரஷ்ய வானொலி நேற்று வியாழக்கிழமை அறிவித்தது

பிலிப்பீன்ஸின் சுதந்திர தினத்தன்று இச்சதித்திட்டம் முறியடிக்கப்பட்டதாக மேலும் கூறப்பட்டது. இச்சதித்திட்டம் வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பிலிப்பீன்ஸில் ஆயுதப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (8-எ)

வார்ஸோ ஆயுதக் குறைப்புக்கு நேட்டோ ஆதரவு

லண்டன், ஜூன் 12

வார்ஸோ அமைப்பின் ஆயுதக் குறைப்பு சம்பந்தமான தீர்மானத்தை நேட்டோ வரவேற்றுள்ளது.

ஹங்கேரி தலைநகரான புடாபெஸ்டில் வார்ஸோ ஒப்பந்த நாடுகள் அமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

தரை, ஆகாய யுத்தங்களுக்குத் தேவையான ஆயுதங்களைக் குறைப்பது சம்பந்தமாக இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

25 சதவீத ஆயுதக் குறைப்பை ஊக்குவிக்கும் இத்திட்டம் 1990 இல் இருந்து நடைமுறைக்கு வரவேண்டும் என்று வார்ஸோ தீர்மானம் கூறுகிறது

இத் தீர்மானத்தையே வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பு (நேட்டோ) வரவேற்றுள்ளது. (இ-எ)

அணு விபத்து பாதிப்புக்கு நிதி உதவி

மாஸ்கோ, ஜூன் 12

ரஷ்யாவில் இடம்பெற்ற செனோபில் அணு நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக நாடுகள் 6 கோடி டாலர் நிதி உதவி வழங்கியுள்ளன.

ரஷ்ய கரன்ஸியில் இத்தொகை 4கோடி ரூபிள்கள் ஆகும்.

உலக நாடுகளின் இந்த உதவிக்கு ரஷ்யா நன்றி தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி இந்த அணுவிபத்து செர்னோபிலில் ஏற்பட்டது. (இ-எ

வெளி உலகில்

தட்சர் கொலை முயற்சி ஐவர் குற்றவாளிகள்

லண்டன், ஜூன் 12

பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சரை 1984இல் கொலைசெய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பாக குற்றஞ்சுமத்தப்பட்ட ஐரிஷ் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த ஐவர் குற்றவாளியாகக் காணப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை லண்டன் நீதிமன்றம் ஒன்று அவர்களைக் குற்றவாளிகளாகக் கண்டது. தண்டனை வழங்குவது வேறொரு திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

1984, 1985 இல் லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக இந்த 5 பேர் மீது லண்டன் பொலீஸார் குற்றம் சுமத்தியிருந்தனர்.

அச்சம்பவங்களில் ஒன்றுதான் 1984 கன்சர்வேட்டிவ் மாநாட்டில் கலந்துகொள்ள பிரைட்டன் நகர் சென்றிருந்த சமயம் பிரதமர் தட்சர் தங்கியிருந்த ஹோட்டலுக்குக் குண்டு வைத்ததாகும்.

இச்சம்பவத்தில் பிரதமர் உயிர் தப்பினார். ஆனால் 5 பேர் உயிரிழந்தனர். (இ-எ)

அமெரிக்காவிலிருந்து ஆயுதக் கடத்தல் முயற்சி முறியடிப்பு

பாரிஸ், ஜூன்.12

அமெரிக்காவில்இருந்து ஆயுதங்களைக் கடத்துவதற்கு ஐரிஷ் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த ஒரு கோஷ்டி எடுத்த முயற்சியை பிரஞ்சுப் பொலீஸார் கடந்த புதன்கிழமை முறியடித்தனர்.

பாரிஸ் ஊடாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இம் முயற்சிக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் அமெரிக்கர்கள் மூவர், ஐரிஷ் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட நால்வரை பிரஞ்சுப் பொலீஸார் எகது செய்தனர். (இ-எ)

கிளர்ச்சி செய்தவர்-ள் கைது

சியோல், ஜூன் 12

தென்கொரியாவில்அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றை பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

கலைத்தும்போகமறுத்த 27 பேர் கைது செய்யப்பட்டனர். (ஒ)

புதுவை சுதாப்பிரசங்கி மரணம்

சென்னைஜூன் 12

புதுக்கோட்டை சன்மார்க்க சங்கத்தைச் சேர்ந்த பிரபல சமய சொற்பொழிவாளரும், சுதாப் பிரசங்கியுமான திரு. முத்தையா சுவாமிகள் மாரடைப்பால் மரணமானார் (ஒ)

உள்ளத்தால் சிவ ஒழுக்கம் பேணினால் மட்டுமே அடியவர் பட்டியலில் இடம் கிடைக்கும்

சேக்கிழார் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 13

உள்ளத்தால் சிவ ஒழுக்கம் பேணினால் மட்டுமே அடியவர் பட்டியலில் இடம் கிடைக்கும்.

"மிலக்வைற் செய்தி"யின் ஆசிரியர் வித்துவான் க. சி. குலரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பண்டிதமணி அரங்கில் புதன்கிழமை நடைபெற்ற இறுதி நாள் சேக்கிழார் விழாவில் அவர் பேசினார்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தின் ஆசியுரையுடன், பெரிய புராண படனத்துடன் விழா ஆரம்பமானது.

வித்துவான் குலரத்தினம் மேலும் பேசுகையில்,

சிவ வேடங்கள் அணிவதால் மட்டும் ஒருவர் சிவனடியாள் ஆகிவிட முடியாது.

பழுத்த மனத்து அடியாளுக உள்ளும் புறமும் மலர சிலவேடப்பொலிவு ஏற்படும்

சிவ வேடங்களை மட்டும் அணிவதால் நாம் இறைவனை விரும்புபவர்களின் பட்டியலில் இடம் பெறலாம்.

ஆனால் உள்ளத்தால் சிவ ஒழுக்கத்தைப்பேணினால் மட்டுமே இறைவன் விரும்பும் அடியவர்களின் பட்டியலில் நமக்கு இடம் கிடைக்கும்.

உண்மையான சிவனடியாரின் பார்வையினாலே, மெய் தீண்டலினாலே உபதேசத்தினாலே அருளின்பம் நமக்குக் கிடைக்கும்.

—இவ்வாறு வித்துகுலரத்தினம் கூறினார்.

வித்துவான் திருமதி வசந்த வைத்தியநாதன் பேசுகையில் கூறியதாவது:

கற்பு என்பது ஆண் பெண் இருபாலாருக்கும் வேண்டிய ஒழுக்கம் மகளிருக்கு மட்டும் உரியமாண்பு என்ற நிலைமாறி அவ்வொழுக்கம் இருதரப்புக்கும் பொதுவானது என்ற நிலைப்பாடு உருவாக வேண்டும்.

அத்கைய விழுப்பம் வாய்ந்த சீலம் சமுதாயத்தில் மலர வேண்டும்

கற்பொழுக்கம் மகளிருக்கு மட்டும் உரியது என்று நிலைப்பாடு தவறானது.

எந்தச் சூழ்நிலையிலும் சலனம் அடையாது கற்பைப் பேணுவது பெண்மைக்கு நிறையாகும்.

அதே போன்று பெண்ணே விழைந்து பின் செல்லும் சலனம் அடையாமை ஆண்மை.

இத்தகைய கற்பொழுக்கத்தை இரு சாராரும் பேணிக்காக்க வேண்டும்.

பெரிய புராணக் கதாநாயகனாக விளங்குபவர் சுந்தரமூர்த்தி நாயனார்.

ஆன்மீக குழந்தை உணர்வும் உள்ளமும் பெற்ற சம்பந்தருக்கு கழிவிரக்கத்துடன் கவிதை பொழிந்த அப்பரடிகளுக்குக் கிடைக்காத சிறப்பிடம் சுந்தரனாருக் குண்டு.

சம்பந்தரும், அப்பரும் இறைவனின் திருவடிகளைப் பற்ற, சுந்தரர் அடியார்களின் திருவடிகளைப் பற்றி அடியார்க்கும் அடியேன்'' என்று கதறியவர்.

சிவதொண்டர்களின் அடிச்சுவடு பின்பற்றித் திருத்தொண்டத் தொகையை நமக்குத் தந்தவர் சுந்தரர்.

கடைசிவரை தனக்குரிய ஒழுக்க சீலத்தை, அந்தண்மையைப் பேணியவர் சுந்தரர். வழுக்கி விழினும் இறைநாமம் பாடியவர்.

உயிர் போய் உடல் பாடையில் போகும் வரை இறைநாமம் சொல்வதை மறக்க மாட்டேன் என்ற உறுதி பூண்டவர் சுந்தரர். அவரே சேக்கிழார் பெரிய புராணக் கதாநாயகன் ஆகிறார்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு ஒரு புண்ணிய நூற்றாண்டு. திருத்தொண்டர் பெரிய புராணமும், கம்பராமாயணமும் நமக்குக் கிடைத்த நூற்றாண்டு இது.

நாடகக் காப்பியப்பண்பும் பாங்கும் மிளிரப் பெரியபுராணத்தைப் படைத்துள்ளார் சேக்கிழார்.

இப்படி அவர் கூறினார். (இ-9)

இனவாதத்தை வளர்க்கும் அரசால் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது

சரத் அஞ்சலிக் கூட்டத்தில் உரை

கரவெட்டி, ஜூன் 13

ஒரு நாட்டில் இனவாதத்தை வளர்க்கும் அரசாங்கத்தால் அந்நாட்டின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது

பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு கூறினார்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சரத் முத்தெட்டுவேகமவுக்கு நடத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்தினார்

திரு. க. ஈஸ்வரபாதம் தலைமையில் வைபவம் நடைபெற்றது

பேராசிரியர் சிவத்தம்பி மேலும் குறிப்பிடுகையில் சரத் ஓர் அரசியல் வாதியாக மட்டுமின்றி சிறந்த பொதுவுடமை வாதியாகவும் வாழ்ந்ததே அவருக்கு விழா எடுக்க காரணமாகும்.

அடிப்படையில் தமிழ் மக்களின் நியாயப் பாட்டை உணர்ந்தவர் சரத்

நமது பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் வேகுசன சாதனம் நாடாளுமன்றம் மூலம் எடுத்துக்கூறி வந்தார்

இனப்பிச்சினை சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு அல்ல. அரசின் நிலையாலேயே ஏற்பட்டது என வெளிப்படுத்தினார். (உ-70)

கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு அருகில் நடமாட வேண்டாம்

மக்களுக்கு புலிகள் அறிவுறுத்து

விசுவமடு, ஜூன் 13

கிளிநொச்சி இராணுவ பொலீஸ் கூட்டு முகாமுக்கு அண்மையில் உள்ள பாதைகளில் நடமாடவேண்டாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களைக்கேட்டுள்ளனர்

இதுசம்பந்தமான சுவரொட்டிகள் கிளிநொச்சி நகர்ப்புறங்களிலும் இராமப்புறங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒட்டப்பட்டுள்ளன.

'கிளிநொச்சி இராணுவப்பொலீஸ் கூட்டுமுகாமுக்கு அண்மையில்உள்ள பாதைகளில் நடமாடுவதை அனைவரும் தவிர்த்துக்கொள்ளவும். முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் எந்நேரமும் எதிரியினால் விமான பீரங்கித் தாக்குதல் நடத்தப்படலாம்.

'இவ்வாறான இன ஒழிப்பு நடவடிக்கையினால் ஏற்படும் அழிவுகளைத் தவிர்க்கக் கூடுமானவரை இராணுவ முகாமுக்கு அண்மையில் தவிர்த்தோ கூட்டமாகவோ நடமாடுவதைத் தவிர்க்கவும்.

இப்படி சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-116)

குறைந்த செலவில் வீடு

சாவகச்சேரி, ஜூன் 13

குறைந்தசெலவில் வீடு கட்டும் போட்டியில்சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் கைதடி மத்தியைச் சேர்ந்த சந்தன ஈஸ்வரன் என்பவர் முதலாவது இடத்தைப் பெற்றார்.

பரிசுத் தொகையாக 1500 ரூபாவும் சான்றிதழும் இவருக்கு வழங்கப்படும். (இ-31

பொங்கல் விழாவில் ஆயுதப்படையினர்

வேலணை, ஜூன் 13

நயினாதீவு தில்லை வெளிசிவிபுரி அம்மன் ஆலய வருடாந்த வேள்வி பொங்கல் விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடந்தது.

இந்த ஆலயத்தின் வேள்வி பொங்கல் விழாவில் நயினாதீவு கூட்டு ஆயுதப்படை முகாமைச் சேர்ந்த பல ஆயுதப் படையினரும் கலந்து கொண்டு வழிபாடுகள் செய்தனர்

ஆயுதபாணிகளாகச் சென்ற ஆயுதப்படையினரைக் கண்ட பக்தர்கள் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தனர்.

ஆனால் ஆயுதப்படையினர் அங்கு சில மணி நேரம் தரித்து நின்று விட்டு தங்களது முகாமிற்கு திரும்பி சென்று விட்டனராம்ச் (உ-167)

புளியங்கூடல் உற்சவ ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஜூன், 13

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப் பதி சிறிமகாமாரி அம்பாள் ஆலயவருடாந்த மகோற்சவம் வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

28 ஆம் திகதி சனிக்கிழமை தேர் திருவுழாவும் மறுநாள் தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (ஒ-199)

சோதிடம்

குறள்:
வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளையபின்
மாண்டற் கரிதாம் பயன்.

பொருள்:
பிறர் பொருளைக் கவர விரும்புவதால் ஆகும் ஆக்கத்தை விரும்பாமலிருக்க வேண்டும்; அது பயன் விளைகையிலோ அப்பயன் நன்மையாவது அரிதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர்விஷன்
உங்கள் வீடியோ உபகரணங்களை
(T. V. டெக்) உத்தரவாதத்துடன்
பழுது பார்த்துக் கொள்ள
EVERVISION
21 A, Clock Tower Road,
JAFFNA.

உதயன்

13 — 06 — 1986 வெள்ளிக்கிழமை

எவர்விஷன்
நினைவில் நிலைக்கும் வண்ணம்
மங்கள வைபவங்களை வீடியோ
படமாக்கிக் கொள்ள
EVERVISION
21 A, Clock Tower Road,
JAFFNA.

மண்டைதீவுப் பகுதி

வெறிச் சோடிக் கிடக்கின்றது

குருநகருக்கான படகுச் சேவையும் நிறுத்தம்

மண்டைதீவு, ஜூன் 13

மண்டைதீவு கிராமம் கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக வெறிச் சோடிக் கிடக்கின்றது.

இப்பகுதி மக்கள் மண்டைதீவு பரவைக் கடல் வீதி வழியாகச் சென்று அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் சுமார் 500க்கு மேற்பட்ட குடும்பங்கள் கடந்த புதன்கிழமை தங்கியிருந்தனர்.

இவர்களுக்கு இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் உணவுகளை வழங்கி ஆதரவளித்து வருகின்றார்கள்.

கடந்த புதன்கிழமை காலை இந்த அகதிகளை வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

தற்காலிகமாக குருநகர் மண்டைதீவு படகு சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அராலித்துறையூடாக பெரும் தொகையான பிரயாணிகள் தினமும் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

மண்டைதீவு— அல்லைப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து அராலி துறையடி வரை தனியார் பஸ் சேவை நடைபெறுகின்றது.

அல்லைப்பிட்டியிலிருந்து அராலி துறையடிக்கு பிரயாணி ஒருவருக்கு 7 ரூபா பஸ் கட்டணமாக அறவிடப்படுகின்றது. (இ - 88)

ஊர்காவற்றுறை, அச்சுவேலி புங்குடுதீவு, சுழிபுரம் பென்ஷன் 17 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூன் 13

ஊர்காவற்றுறை, அச்சுவேலி, புங்குடுதீவு, சுழிபுரம் தபால் நிலையங்கள் மூலம் பென்ஷன் பெற்று வந்தவர்களுக்கு பென்ஷன் வழங்கும் புதிய திகதி ஜூன் 17 செவ்வாய்க் கிழமை ஆகும்.

இப்படி யாழ் பிரதம தபால் நிலையம் அறிவித்துள்ளது-

யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் காலையில் அவர்களுக்குப் பென்ஷன் வழங்கப்படும்.

ஜூன் 11 ஆம் திகதி தவிர்க்கமுடியாத காரணங்களினால் பென்ஷன் வழங்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ - எ - 9)

ராஜீவ் - ஜே. ஆர். சந்திப்பு அவசியம் என்கிறார் புல்ஜின்ஸ்

கொழும்பு, ஜூன் 13

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ராஜீவ் - ஜெயவர்த்தன உச்சி மாநாடு ஒன்று இன்றைய நிலையில் அத்தியாவசியமானது. ஆனால் இருதரப்பினரும் வேறுபாடுகளைக் களையும் விதத்தில் தீர்வு ஒன்றுக்கு வழி கோலிய பின்னரே இப்படியான உச்சி மாநாடு நடத்தப்பட வேண்டும்.

பேராசிரியர் ராஸ்ப் புல்ஜின்ஸ் மேற்கண்ட கருத்தை, கொழும்புக் கருத்தரங்கு ஒன்றில் வெளியிட்டார்.

இலங்கை மனித அடிப்படை உரிமைச் சங்கத்தின் ஆதரவில் இலங்கை-இந்திய உறவுகள் பற்றி பேராசிரியர் புல்ஜின்ஸ் பேசினார். (இ - எ - 2)

இணைப்பு ஒன்றே ஈழக் கோரிக்கையை ஈடு செய்ய வழி

கூட்டணிக் கிளை தீர்மானம்

மட்டக்களப்பு, ஜூன் 13

வடக்கு- கிழக்கு இணையாத எந்த ஒரு தீர்வும் ஏற்றுக்கொள்ள முடியாதென தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடம் உறுதியாக நிற்க வேண்டும்.

இரு மாகாணம் இணைந்த மொழிவாரியான மாநிலம் தான் தமிழீழக் கோரிக்கையை ஈடு செய்வதாக அமையும்.

மேற்கண்ட தீர்மானம் பொத்துவில் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அக்கரைப்பற்றில் மேற்படி குழு திரு சோ. பாலசுந்தரம் தலைமையில் கூடியது.

இனப் பிரச்சினை விவகாரம், ஆயுதப்படையினரின் தேடுதல் தமிழ்—முஸ்லிம் ஒற்றுமை உட்பட இன்றைய பிரச்சினைகள் பல இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன

பொத்துவில் தொகுதி தமிழ் கிராமங்களில் படையினர் மேற்கொள்ளும் தேடுதல் வேட்டையில் அப்பாவிகள், விவசாயிகள், அரச ஊழியர்கள் கைது செய்யப்படுவதை தடுக்குமாறு ஜனாதிபதியை டாக்டர் நீலன் திருச்செல்வம் மூலம் கோருதல்.

தமிழ்- முஸ்லிம் சமூக ஒற்றுமையை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். (உ-21)

இளைஞனை சைக்கிளுடன் ஏற்றினர்

காங்கேசன்துறை, ஜூன் 13

பலாலியில் இருந்து காங்கேசன்துறை வந்த சிப்பாய்கள் வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவனைத் தாக்கிவிட்டு இளைஞனையும் மோட்டார் சைக்கிளையும் கவச வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

பலாலியில் இருந்து சிப்பாய்கள் நேற்றுக் காலை 10 30 மணி அளவில் நடைபவனியாக காங்கேசன்துறை முகாம் நோக்கி வந்தனர்.

வரும் வழியில் ஊறணிக்கு அண்மையில் மேற்கண்ட சம்பவம் நடந்தது.

இதற்கிடையில் நேற்று காலை 5.30 மணி அளவில் காங்கேசன்துறையிலிருந்து பலாலி நோக்கிச் சென்ற படையினர் மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலைக்கு அண்மையில் வீதியில் கிடந்த பல சைக்கிள்களை சுக்கு நூறாக்கிச் சென்றனர். (இ - 68)

ஆறாவது பிறந்ததின வாழ்த்து

செல்வன் ரவிப்பிரதாப்

கொக்குவிலைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் மகேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் ரவிப்பிரதாப் 13. 6. 86 ஆகிய இன்று தனது ஆறாவது பிறந்தநாளை தமது உற்றார் உறவினருடன் 'கோகுல வாசா' வில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இருவர் பலி

கொழும்பு, ஜூன் 13

கொட்டாஞ்சேனை கெயிட்டி தியேட்டருக்கு அருகில் இடம் பெற்ற குண்டு வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 36 பேர் காயமடைந்தனர்.

ஓட்டோ ரிக்ஷோவில் வைக்கப்பட்ட குண்டே வெடித்தது என்று கூறப்படுகின்றது.

வியாழன் இரவு நடந்த இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் பெயர் அப்துல் ஹமீது.

கெயிட்டி படமாளிகையில் 'சகமான ராகங்கள்' படம் பார்த்துவிட்டு வந்த ரசிகர்களே இவ்விபத்தில் சிக்கியவர்கள் என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

இரு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டினால் காயம்

யாழ்ப்பாணம், ஜூன்13

யாழ்ப்பாணக் கச்சேரியடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு, மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள்.

வான் ஒன்றில் வந்த ஒரு கோஷ்டியினரே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று சொல்லப்படுகிறது.

எனினும் அடையாளம் காணமுடியாத நிலையில் தவறுதலாகத் தாம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக சம்பந்தப்பட்ட கோஷ்டியினர் கூறியதைத் தொடர்ந்து உடனடியாக மேலும் அசம்பாவிதம் எதுவும் அந்த இடத்தில் நிகழவில்லை. (அ-5)

சிப்பாய்கள் வெளி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதுவீதி வழியாக வயாவிளான் இராணுவத்துக்கானபொருள்கள் கடுமையான இராணுவப் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டதாகத் தெரிகின்றது.

எனினும் வயாவிளான் முகாமில் இருந்தும் பலாலி முகாமில் இருந்தும் சிப்பாய்கள்பலாலி—யாழ். வீதி வழியாகவும் நடைபவனியாக ரோந்து புரிந்தனர்.

வயாவிளான் சந்திக்கு அண்மையிலுள்ள 'மின்மீன்' நிலையத்துக்குள்ளும் அண்மையிலும் நீண்ட நேரமாக நின்ற சிப்பாய்கள் அயல் புறங்களை நோக்கி சராமாரியாகச் சுட்டுக் கொண்டிருந்தனர்.

காலை 8 மணிக்குப் புறப்பட்ட சிப்பாய்கள் பிற்பகல் 1 மணிவரைக்கும்அவ்விதிப் பகுதிகளில் நடமாடித்திரிந்தனர்.

காலை 7-30 மணிமுதல் ஹெலிக்கொப்டர் ரோந்து புரிந்து திரிந்ததாயினும் காலை 8·30 மணிக்கு துப்பாக்கிப்பிரயோகம் செய்யத் தொடங்கியது.

ஹெலிக்கொப்டரின் துப்பாக்கிப் பிரயோகம், வயாவிளானில் ஆரம்பித்து குரும்பசிட்டி, கட்டுவன்,மயிலிட்டி, பலாலி வடக்கு பகுதிகளுக்கும் பரவியது.

இதனால் இப்பகுதிப் பாடசாலை மாணவர்களின் வரவு மிகமிகக் குறைந்திருந்தது.

இரண்டு பொம்மர் விமானங்கள் வயாவிளான் பலாலி முகாம்களை உள்ளடக்கி காலை தொடக்கம்ஐந்துதடவைகள் சுற்றியபடி ரோந்து புரிந்தன. எனினும் தாக்குதல் எதுவும் செய்யப்படவில்லை.

பிற்பகல் 5மணி வரை 'பொம்மர்'களின் நடமாட்டமும், ஹெலிக் கொப்டர்களின் ரோந்தும் வழமைக்கு மாறாக இருந்தன.

போராளிகளும், வயாவிளான் பலாலி முகாம்களை அண்டிய பகுதிகளில் ஏ. கே. 47 ரக துப்பாக்கிகள் சகிதம் ரொக்கெட் லோஞ்சர் சகிதமும் சீருடையினர்களுடன்எதிர்த்தாக்குதலுக்குத் தயாராக நின்றதை அவதானிக்கக் கூடியதாக விருந்தது''

மக்களது நடமாட்டங்கள் மிகக் குறைந்திருந்தன. (119)

வவுனியா புதிய இணைப்பு அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 13

வவுனியா மாவட்ட புதிய இணைப்பு அதிகாரியாக கேர்னல் கொபேகடுவ கடந்த செவ்வாய்க் கிழமையிலிருந்து கடமையாற்றி வருகிறார்.

இவர் பதவி ஏற்றபின் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினர் நேரில் இவரைச் சந்தித்து வவுனியா மக்களின் பாதுகாப்புக் குறித்துப் பேசினர்.

அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதும் இவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

அண்மைக் காலத்தில் வவுனியாவில் கைது செய்யப்பட்ட 40 பேரின் நிலை பற்றி இவரிடம் கேட்ட பொழுது அவர்களில் 12 பேரை விடுதலை செய்ததாகப் பதில் அறிவிக்கப்பட்டது. (இ - 6)

மண்ணெண்ணெய் தட்டுப்பாடு

புங்குடுதீவு ஜூன் 13

தீவுப்பகுதியில் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒருபோத்தல் மண்ணெண்ணெய் 18 ரூபா வரை விற்பனையாகிறது. மரச்சல், பெற்ரோல் வகைகளும் கிடைப்பதாயில்லை இதன் காரணமாக மினி பஸ் கட்டணங்களும் பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன. புங்குடுதீவிலிருந்து அராலித்துறை முகத்திற்குச் செல்வதற்கு 10 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது.

மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டினால் வீடுகளில் விளக்கேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு மின்னொளியும் அடிக்கடி தடைப்படுகிறது. இரவு வேளைகளில் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள்.

இப்படியும் நடந்தது

யாழ்ப்பாணம், ஜூன்13

ஷெல் தாக்குதலின் போது காயமடைந்த எனது அக்காவை கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கச் சென்ற தம்பியாரை சிப்பாய்கள் அடித்துத் துரத்தினர். இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நடந்தது சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

புதன்கிழமை "ஷெல்" தாக்குதலின் போது காயமடைந்தார். பெரிய தம்பி கனகம்மா என்ற பெண்.

வியாழக்கிழமை கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இவரைச் சேர்ப்பதற்காக மாட்டுவண்டியில் கூட்டிவந்தவர் இவரது தம்பியார்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் நின்ற சிப்பாய்கள் இவரை அணுகி வந்து பலமாகத்தாக்கி ஓட ஓடத் துரத்தினார்களாம்.

இதனால் இவரது சகோதரி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருப்பதற்கு பயந்ததால் யாழ் ஆஸ்பத்திரிக்கு கெண்டு வரப்பட்டார். (இ - 10)

விளையாட்டரங்கு

ரோட்டரி விளையாட்டு போட்டிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்ப்பாணம் ரோட்டரிக்கழகம் நடத்தும் வருடாந்த ரோட்டரி விளையாட்டுகள் கடந்த மே மாதம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

கிரிக்கெட். உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டி உட்பட பல்வேறு விளையாட்டுகளில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து ஐநூறு வீரர்களும், வீராங்கனைகளும் பங்குபற்றுகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆட்டக்களங்களில் அடுத்தடுத்து இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 20 கழக அணிகள் பங்குபற்றவிருக்கின்றன.

இந்த ஆட்டங்கள் பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் நடைபெறும்.

கரபந்தாட்டம் புத்தூர் ,புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களிலும் அரியாலை விளையாட்டுக் கழகத் திடலிலும் நடைபெறும்.

கிரிக்கெட் உதைபந்தாட்ட ஆட்டங்கள் நடைபெறும் இடங்கள், திகதிகள்பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

உதைபந்தாட்டப் போட்டிகள் யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழகத்தின் சார்பில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும்.

கூடைப் பந்தாட்டப் போட்டிகள் சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கூடைப்பந்தாட்ட திடல்களில் நடைபெற்று வருகின்றன. (உ)

இல விளையாட்டு போட்டிகள்

உடுவில், ஜூன் 13

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி அதிபர் திரு. ஐ. மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. தனஞ்செயன் முதன்மை விருந்தினராகவும் சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர் ரி. குமாரவேல், வைத்தியகலாநிதி சி. ஜெயமனோகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பார். (இ-27

யாழ் நீதிமன்றம் இன்று முதல் மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம் ஜூன் 13

யாழ் நீதிவான் நீதிமன்றம் இன்று முதல் மீண்டும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ் மேல் நீதிமன்றக் கட்டடத்தில் தற்காலிகமாக தினமும் சில மணித்தியாலங்கள் நீதவான்நீதிமன்றம் இயங்கும்.

நீதிவான் நீதிமன்றப் பணிமனை தற்காலிகமாக பருத்தித்துறை வீதியில் உள்ள ஒரு கட்டடத்தில் இயங்கும். (இ - எ)

இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம் ஜூன் 13

சிகரெட் வாங்கச் சென்ற இளைஞர் ஒருவர் மீது கோட்டையில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது

இதனால் இளைஞருக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது.

நேற்று மாலை நான்கு மணிஅளவில் கடற்கரை வீதியில் உள்ள தமது வீட்டில் இருந்து அருகே உள்ள வீட்டுக்கு சிகரட் வாங்கச் சென்ற சமயமே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இந்த இளைஞரின் பெயர் இராசலிங்கம் விமலன் வயது 22. குருநகர்வாசி.

காயம்ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (இ - 10)

அம்பாள் பொங்கல்

பருத்தித்துறை, ஜூன்13

தும்பளை அருள்மிகு வீரமாகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை மாலை நடைபெறும். (ஒ-109)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மின் தடை

இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-6-15 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் 33 K. V. மின் பாதையில் அவசர திருத்த வேலைகள் செய்ய இருப்பதனால் காலை 8 00 மணிமுதல் மாலை 1.00 மணி வரை யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உப மின் நிலையங்களுக்கும், கோண்டாவில், கொக்குவில், கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மின்விநியோக தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இம் மின் தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மன வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்
யாழ் பிரதேச அலுவலகம்
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

சதாசிவம் - தமிழரசுவரன் (அர்ச்சுனா)

சதாசிவம்-தமிழரசுவரன் (அர்ச்சுனா) காலமானார். காசிப்பிள்ளை சதாசிவம் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்) நாகேஸ்வரி சதாசிவத்தின் அன்பு மகனும் மகேஸ்வரன்(U.K.), லோகேஸ்வரன்(U.K.), சத்தியவாகீஸ்வரன் (U.K.), மங்களேஸ்வரன் (U.K.), திலகலெட்சுமி (வேம்படி மகளிர் கல்லூரி), நவலெட்சுமி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாகிய தமிழரசுவரன் (அர்ச்சுனா) 12-6-86இல் வீர மரணம் எய்தினார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

46, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

விசேட அறிவித்தல்

கீழ்க் குறிப்பிட்ட எமது ஸ்தாபனங்கள் இரண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன

புதிய விலாசம்:
Office Equipment Ltd.
Kalamazoo Systems Ltd.
No 45, Pirappankulam Road,
Off K.K S. Road, Jaffna.
மனோகரா சந்தியிலிருந்து 100 யார் தூரத்திலுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 13—6—1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under Number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org